ஆப்பூர் ஊராட்சி
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்
**ஆப்பூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்**

நாள்: 13.05.2015

அனுப்புநர்:
**திருமதி.M.வரலட்சுமி மதுசூதனன்**
ஊராட்சி மன்ற தலைவர்,
ஆப்பூர்.

பெறுநர்:**M/S Bhoomi Architerior Private Limited**
No.7D, Ram Mansion,
389, Pantheon Road,
Egmore, Chennai – 600008.

பொருள்: காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், ஆப்பூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.60/19pt, 2pt, 61/1pt, 68/1pt, 2pt, 69pt, 70/1pt, 73/1pt, 3Apt, 96pt, 98/5pt, 99/1pt, 2pt, 100/1pt, 3A1pt, 3A2pt, 3B1pt, 3B2pt, 106/3pt, 107/1pt, 2pt, 3pt, 4pt, 6; 142/1A, 2A, 3A, 3B; 143/1, 2, 3; 144/1pt, 2Apt, 2B, 3pt, 147/2pt, 3, 4, 149/1 பரப்பு 30667.38 சதுர மீட்டர் கொண்ட மனையிடத்திற்கு மனை ஒப்புதல் மற்றும் அம்மனையில் 19561.51 ச.மீ கட்டிட பரப்பில் அமையும் Block-I, II, III & IV-ல் அமையும் குடியிருப்பு மற்றும் வணிக உபயோக கட்டுமான வரைபடங்களுக்கு தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் அளித்தல் தொடர்பாக.

பார்வை:

1. நகர் ஊரமைப்பு மண்டல் துணை இயக்குநர்(பொ) செங்கல்பட்டு ந.க.எண்.2788/2014/செம3
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.19639/2014/பிஏ2 நாள்.28.01.2015
3. மனுதாரர் தி/எ்.பூமி ஆர்க்கிடீரியர் பிரைவேட் லிட் அவர்களின் கடிதம் நாள் இல்லை.
4. ஊராட்சி மன்றத் தலைவர், ஆப்பூர் ஊராட்சி மன்றம் அவர்கள் கடிதம் நாள் 22.08.2014
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009/பிஏ2 நாள்.16.04.2009
6. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.28.03.2012
7. மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களின் தடையின்மைச் சான்று ந.க.எண்.28623/2011/ஆ1, நாள்.10.01.2013 (ம) 26.02.2013
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014
9. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5013/2015/முதி, நாள்.19.03.2015
10. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.05.02.2015 (பொது ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய கோரியது (ம) அடிப்படை உட்கட்டமைப்பு வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி, தேசிய சிறுசேமிப்பு பத்திரம் நகல் செலுத்தக் கோரியது)
11. மனுதாரர் தி/எ்.பூமி ஆர்க்கிடீரியர் பிரைவேட் லிட் அவர்களின் கடிதம் (ம) இணைப்புகள் நாள்.04.05.2015 (பொது ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட விவரம் (ம) அடிப்படை உட்கட்டமைப்பு வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி, தேசிய சிறுசேமிப்பு பத்திரம் ஆகியன செலுத்தியதற்கான விவரம்)

உத்தரவு

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், ஆப்பூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள் 60/1pt, 2pt, 61/1pt, 62/2pt, 68/1pt, 2pt, 69pt,70/1Apt, 73/1pt, 3Apt, 96pt, 98/5pt,99/1pt, 2pt, 100/1pt, 3A1pt, 3A2pt, 3B1pt, 3B2pt, 106/3pt, 107/1pt, 2pt, 3pt, 4pt, 6, 142/1A, 2A, 3A, 3B, 143/1,2,3,144/1pt, 2Apt, 2B.3pt,147/2pt, 3,4,149/1, பரப்பு 30667.88 சதுர மீட்டர் கொண்ட மனையிடத்தில் கீழ்கண்டவாறு உபயோக கட்டுமானங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**BLOCK – I**

| | | | | |
|---|---|---|---|---|
| Ground Floor | - | 1140.47 m² | - | 16 குடியிருப்புகள் |
| First Floor | - | 1079.78 m² | - | 16 குடியிருப்புகள் |
| Second Floor | - | 1075.90 m² | - | 16 குடியிருப்புகள் |
| Third Floor | - | 1075.90 m² | - | 16 குடியிருப்புகள் |
| | | | | 64 குடியிருப்புகள் |

**BLOCK – II**

| | | | | |
|---|---|---|---|---|
| Ground Floor | - | 916.49 m² | - | 14 குடியிருப்புகள் |
| First Floor | - | 938.82 m² | - | 14 குடியிருப்புகள் |
| Second Floor | - | 938.82 m² | - | 14 குடியிருப்புகள் |
| Third Floor | - | 938.82 m² | - | 14 குடியிருப்புகள் |
| | | | | 56 குடியிருப்புகள் |

**BLOCK – III**

| Floors | | Residential | Commercial | No.of Units |
|---|---|---|---|---|
| Ground Floor | - | 1140.47 M² | 155.95 m² | 16 குடியிருப்புகள் |
| First Floor | - | 1079.78 M² | 155.95 m² | 16 குடியிருப்புகள் |
| Second Floor | - | 1079.78 M² | 155.95 m² | 16 குடியிருப்புகள் |
| Third Floor | - | 1075.90 M² | - | 16 குடியிருப்புகள் |
| | | | | 64 குடியிருப்புகள் |

**BLOCK – IV**

| | | | | |
|---|---|---|---|---|
| Ground Floor | - | 1742.83 m² | - | 28 குடியிருப்புகள் |
| First Floor | - | 1632.30 m² | - | 28 குடியிருப்புகள் |
| Second Floor | - | 1623.30 m² | - | 28 குடியிருப்புகள் |
| Third Floor | - | 1623.30 m² | - | 28 குடியிருப்புகள் |
| | | | | 112 குடியிருப்புகள் |

மேற்கண்ட உத்தேச 296 குடியிருப்புகள் (ம) வணிக உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன், பார்வை 1-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் முன்னிலை கடிதத்தில் கட்டிட அனுமதி வழங்க கட்டிட வரைபடங்களுக்கு கவ/ந.ஊ.இ.எண்.14/2015 என எண்ணிட்டு இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1997 மற்றும் பொது கட்டிட விதி 1973 ஆகியவற்றை நிறைவு செய்வதால் நகல் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) அவர்களின் நிபந்தனைகளுக்கு உட்பட்ட தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதி 1997 பிரிவு 25-ன் படி ஊராட்சி கட்டிட அனுமதி வழங்க உத்தரவு அளித்ததின் பெயரில் 19561.56 ச.மீ கட்டிட பரப்பில் அமையும் **Block I, II, III, IV** – ல் அமையும் குடியிருப்பு மற்றும் வணிக உபயோக கட்டுமான வரைப்படங்களுக்கு 1 முதல் 45 வரை என எல்லையிட்டு, மவ/நஊதுஇ(செம) எண்.51/2015 என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதலும், அம்மனையில் அமையும் குடியிருப்புகள் மற்றும் வணிக உபயோக கட்டுமான வரைபடங்களுக்கு கவ/நஊதுஇ (செம) எண்.18 (1 முதல் 9 தாள்கள்)/2015 என எண்ணிட்ட வரைபடங்களுக்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

இந்த அனுமதியானது 13.05.2015 முதல் 12.05.2018 வரை மூன்று ஆண்டிற்கு செல்ல தகுந்தாகும். மேலும் இதற்கான அனுமதி கட்டணம் (210480 சதுரடி) ரூபாய். 2,10,480/- (எழுத்தால் இரண்டு லட்சத்தி பத்தாயிரத்தி நானூற்று என்பது மட்டும்) காசோலையாக (காசோலை எண்.000572/ 13.05.2015) பெறப்பட்டு செலுத்தியதற்கான ரசீது மற்றும் விற்பளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**வரையறைகள்:**

1. பலமாடி தொகுப்பு கட்டிடத்தின் உயரம் மற்றும் அகலம் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்கள் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

2. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டத்திலும், தமிழ்நாடு ஊராட்சித் திட்டத்திலும் அரசினால் விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாட்டுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

3. அரசுக்கு சொந்தமான இடங்களிலோ அல்லது விண்ணப்பதாரருக்குத் தொடர்பில்லா வேறு பெயரிலோ அனுமதி வாங்கக்கூடாது.

4. இவ்வணையில் அனுமதிக்கப்பட்ட காலவரையறைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப் பெறாவிட்டால் அனுமதியை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

5. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலாகவோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்டப்பட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் ஊராட்சித்தலைவர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்து ஆணை பெற்று பின்னர்தான் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

6. கட்டிடம் கட்ட ஆணை பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்குப் புறம்பாகவோ பெற்றிருந்தால் மேற்படி ஆணை ரத்து செய்ய ஊராட்சி தலைவருக்கு உரிமை உண்டு.

7. கட்டிடத்திலிருந்து வெளிவரும் கழிவுநீரை விண்ணப்பதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைக்க அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும் கழிவுநீர்த் தொட்டிகள் அமைத்துக்கொள்ள வேண்டும்.

8. கட்டிட வேலை முடிந்து பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 நாட்களுக்குள்ளாக ஊராட்சி மன்றத் தலைவருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

தலைவர்
ஆப்பூர் ஊராட்சி மன்றம்

**நகல்:**

1. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், (பொ)
   செங்கல்பட்டு